இலங்கை அரசாட்சி "கெசெற்" பத்திரிகை.

CEYLON GOVERNMENT GAZETTE No. 6,379, MAY 19, 1910.

# TAMIL TRANSLATIONS OF NOTIFICATIONS.

[Notification relating to amended Municipal By-laws, Kandy.]

1901 ம் ஆண்டின் 8 ம் கட்டளைச்சட்டத்தினால் திருத்திய 1887 ம் ஆண்டின் நகரசங்கங்களைப்பற்றிய சட்டத்தின் 124 ம் பிரிவின் (1) ம் கீழ்ப்பிரிவினால் தம்மிடம் வைத்த தத்துவங்களைச் செலுத்தியும் அதிகார மந்திரசபையின் ஆலோசனையோடும் 1906 ம் ஆண்டு மார்கழிமாதம் 18 ந் தேதி பிரசித்தப்படுத்தப்பட்ட துணைப்பிரமாணங்களுள் XIX. A ம் அதிகாரத்தை கண்டி நகரசங்கத்தவர்களால் பின்வரும் டாப்பிலே கண்டபடி செய்யப்பட்ட துணைப்பிரமாணங்களை, உத்தம தேசாதிபதியவர்கள் சித்தங்கொண்டு உறுதிப்படுத்தியிருக்கிறாரென்பதை இத்தால் தெரிவிக்கப்படுகின்றது.

இராசாங்க லிகிதர் கந்தோர், — உத்தமர் அவர்களின் கட்டளைப்படி,
கொழும்பு, 1910 ம் ஆண்டு மே (வைகாசி)மீ 13 ந் உ. — எச். எல். குரோசுவே,
ஏக்டிங் இராசாங்க லிகிதர்.

இடாப்பு.

XIX. A ம் அதிகாரம்.—சாதாரணமான விடுதிவீடுகள்.

296A. இடாப்பு.—விடுதிவீடுகளெல்லாம் அடங்கிய ஒரு இடாப்பு நகரசங்கத்தலைவர் வசமிருத்தல் வேண்டும்: அவ்விடாப்பு இதன் அநுபந்தத்திலிருக்கும் J. என்னும் செடியூலின் மாதிரியாயிருத்தல் வேண்டும்.

296B. வீடுகளைப் பதிவுசெய்தல்.—சாதாரணமான விடுதிவீடென்று ஒரு வீட்டைப் பதிவுசெய்யுமுன், அவ்வீடிருக்குமிடம் விடுதிகாரருக்குக் கொடுக்கவென்றிருக்கிற அறைகளின் தொகை, அந்த அறைகளின் விஸ்தார முதலிய விபரங்களடங்கியதாயும், இதன் அநுபந்தத்திலிருக்கும் K. என்னுஞ் செடியூல்போன்ற மாதிரியுள்ளதுமான ஒரு விண்ணப்பப் பத்திரம் நகரசங்கத் தலைவருக்கு அனுப்பப்படவேண்டும். அந்த முகாந்திரத்துக்காக நகரசங்கத்தலைவரால் மேற்படி மாதிரியான ஒரு செடியூல் (வேண்டியபோது) கொடுக்கப்படும்.

296C. வீடுகளைப் பதிவுசெய்தல்.—சாதாரணமான விடுதிவீடென்று பதிவுசெய்யப்படவென்னப்பட்டிருக்கும் எந்த வீடாவது அதிக பெலப்புள்ளதாகக் கட்டப்பட்டு ஒழுக்கின்றி நிலையிலிருத்தலோடு தளங்களெல்லாம் ஓட்டினால் அல்லது சேர்த்திறுக்கிய சிமெந்தினால் அல்லது ஒரு அங்குல கனமுள்ள போட்லண்ட் சிமெந்தியோடு சேர்த்திறுக்கிய கல்லும்பால் தளவிசை போடப்பட்டிருத்தல் வேண்டும். அத்தோடு படுக்கையறைகளாகப் பாவிக்கப்படவென்றிருக்கிற எல்லா அறைகளும் அதனதன் பக்கத்திலுள்ள நிலமட்டத்துக்கு மேலிருத்தல் வேண்டும். மேலும் அவ்வீட்டோடு தொடுக்கப்பட்ட வாய்க்கால்களெல்லாம் ஒழுங்காயும் வீட்டு வாய்க்கால்களைப்பற்றிய கீழ்ப்பிரமாணங்களின்படி கட்டப்பட்டவைகளாயுமிருத்தல் வேண்டும். அதுவுமன்றி நகரசங்கத்தலைவர் போதுமென்று சொல்லக்கூடிய மாதிரியான குசினி, கக்கூசு சலக்கூடமோடு குழி முதலியவை யிருத்தல் வேண்டும். மேலும் தண்ணீர் எப்போதைக்கும் மொரேலிதமாய்க் குறைவின்றி வரக்கூடிய மாதிரியாயிருத்தாலன்றி, போதியளவு தண்ணீர் சேர்க்கப்பட்டு நிற்கக்கூடியதாய் ஒரு தொட்டியிருத்தல்வேண்டும்.

296D. விடுதிவீடு வைத்திருப்பவர் உத்தரவுச்சீட்டுப் பெறல்.—ஒரு சாதாரண விடுதிவீடு வைத்திருப்பதற்கு ஒருவன் உத்தரவுகொடுக்கப்படுமுன் அவன் நகரசங்கத்தலைவருக்கு விண்ணப்பஞ்செய்தல் வேண்டும். அப்படிப்பட்ட விண்ணப்பத்தோடு நகரசங்கத்தலைவர் ஒத்துக்கொள்ளக்கூடிய மூன்று அல்லது அதற்கு மேற்பட்ட வீடுடையோரால் கொடுக்கப்பட்ட நன்னடக்கைப்பத்திர மொன்று சேர்க்கப்படவேண்டும். அதுவுமன்றி உத்தரவுச்சீட்டுப்பெற்ற விடுதிவீடு வைத்திருப்போருக்குரிய சட்டங்களையெல்லாம் நிறைவேற்றும் பொருட்டு அப்படி நன்னடக்கைப்பத்திரம் கொடுப்போர் பிணைகொடுத்தலும் வேண்டும்.

296E. விடுதிவீடு வைத்திருப்போருக்கு உத்தரவுச்சீட்டுக்கொடுத்தல்.—விடுதிவீடு வைப்பதற்காக விண்ணப்பஞ்செய்த ஒருவனுடைய குணம் நல்லதென்று நகரசங்கத்தலைவர் கண்டால், அவர் அப்பிரகாரமே ஒரு உத்தரவுச்சீட்டு அவனுக்குக் கொடுக்கலாம்.

296F. விடுதிவீட்டிருப்பவர் தொகையைக் குறைத்தல்.—தொகையைக் குறைப்பதற்கு நியாயத்தையும் அப்படி எவ்வளவு காலம் குறைந்திருக்க வேண்டுமென்பதையும் காட்டி நகரசங்கத்தலைவர் எழுத்திலே ஒரு அறிவித்தலை அனுப்பிப் பெற்றுக்கொண்ட ஒவ்வொரு விடுதிவீடு வைத்திருப்பவனும் தனது வீட்டிலுள்ள எந்த அறையிலாவதிருக்கும் விடுதிக்காரர் தொகையைக் குறைத்தல் வேண்டும்.

296G. அறிகுறிப்பலகை வைத்தல்.—சாதாரணமான விடுதிவீடு வைத்திருப்பவன் தன்வீட்டின் வெளிப்புறத்தில் நல்லாய்த் தெரியக்கூடிய ஓரிடத்தில் கறுத்தத் தீந்தை பூசப்பட்டு (Licensed Lodging House) என்னுஞ் சொற்கள் இரண்டு அங்குல நீட்டுக்குக்குறையாத எழுத்துகளால் வெள்ளைத் தீந்தையில இங்கிலீசு, சிங்களம், தமிழ் என்னும் பாஷைகளில் சேர்த்தியாய் எழுதப்பட்ட ஓர் பலகையை வைத்தல் வேண்டும். அதுமன்றி அவ்வீட்டிலுள்ள ஒவ்வொரு அறையின் வாசலிலும் அவ்வறையில் இத்தனை பேரிருக்கலாமென்று பதிவுசெய்யப்பட்ட தொகை மேற்சொல்லிய மூன்று பாஷையிலும் எழுதப்பட்ட ஒரு பலகை வைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

296H. ஆண்பெண்களிருக்கப் பிறம்பான அறைகள்.—சாதாரணமான விடுதிவீடு வைத்திருக்கு மொருவன் ஒரே படுக்கையறையில் பத்து வயசுக்கு மேற்பட்ட ஆண்பெண்களை இருக்கவிடுதல் கூடாது. ஆனால் பெண்சாதி புருஷன் பெற்றோர் பிள்ளைகளாயிருந்தால் அப்படிவிடலாம். கெட்ட முகாந்திரத்துக்காக தன் வீட்டுக்குள் யாரையாவது விடுதிவீடு வைத்திருப்பவன் இருக்கவிடுதல் கூடாது.

296I. நல்ல ஒழுங்கு.—சாதாரண விடுதிவீடு வைத்திருப்பவன் அறிந்துகொண்டு கெட்ட குணமுள்ளவர்களைத் தனது வீட்டிலிருக்க விடுதல் கூடாது. மேலும் அவன் அவ்வீட்டிலிருப்பவர்கள் நன்னடத்தையுள்ளவராயும் ஒழுங்குள்ளவர்களாயிருக்கச்செய்தல் கடமை. அதுவுமன்றி தனது விடுதிவீட்டிலிருக்கு மொவ்வொரு விடுதிகாரரது பெயர், தொழில், பிறப்பிடம் முதலியவை எழுதப்பட்ட ஓர் டாப்பை வைத்திருத்தலும் வேண்டும்.

296J. காற்றுலாவவிடுதல்.—சாதாரண விடுதிவீடு வைத்திருப்பவனெவனும் படுக்கையறைகளிலுள்ள ஜன்னல்களெல்லாம் தினந்தோறும் குறைந்தபட்சம் நாலு மணித்தியாலத்துக்காவது திறந்துவைத்திருத்தல் வேண்டும். புயல் மழையுள்ள நேரத்தில் அப்படி வைத்திருத்தல் வேண்டியதில்லை.

296K. அப்பரவுசெய்தலும் சுண்ணம்படித்தலும். சாதாரண விடுதிவீடு வைத்திருப்பவன் அவ்வீட்டுச் சுவர்களின் உட்புறமும் மச்சும் ஒவ்வொரு வருஷத்திலும் 3 ம், 6 ம், 9 ம், 12 ம் மாசங்களில் நல்லாய்க் கழுவி வெள்ளையடித்து வைத்திருத்தல் வேண்டும்.

296L. சுத்தமாயிருத்தல்.—மேற்படி விடுதிவீடு வைத்திருப்பவன் எந்த நேரத்திலும் அவ்வீட்டறைகள் விறாந்தைகளெல்லாவற்றையும் சுத்தப்படுத்தி சுகத்துக்கேற்ற நிலையில் வைத்திருத்தல் வேண்டும். படுக்கையறைகளிலுள்ள சாமான்களெல்லாம் நல்லாய்ப் பழுதுபார்த்து வைத்திருத்தல் வேண்டும். மேற்படி வீட்டிலுள்ள ஒவ்வொரு அறையையும், பாதையையும், படியையும் தினந்தோறும் குறைந்தபட்சம் ஒரு முறையாவது கூட்டித்துப்பரவுசெய்து வைத்தல் வேண்டும்.

296M. சுத்தப்படுத்தல்.—மேற்படி விடுதிவீடு வைத்திருப்பவர் எவரும் அவ்விடத்திலுள்ள அழுக்கு குப்பை முதலிய பழுதான பதார்த்தங்களை அங்கிருந்தும் நாடோறு மகற்றிபோடவேண்டும்.

296N. தொற்றுநோய் முதலியவை.—மேற்படி சாதாரண விடுதிவீட்டில் எவருக்காவது தொற்றுநோய் வருமாயில், அவ்வீட்டை வைத்திருப்பவர் அவ்விடுதி வீடிருக்கும் பகுதியைச்சேர்ந்த நகரசங்க இன்ஸ்பெக்றருக்கு அறிவித்தல்வேண்டும். அல்லது கிட்டயிருக்கும் பொலிஸ் ஸ்டேசனுக்காவது நகரசங்கத்தலைவருக்காவது அப்படி அறிவித்தல் வேண்டும். மேலும் சாதாரண விடுதிகள் வைத்திருப்பவன் அவ்வீட்டை ஒழுவித்து அத்தொற்றுநோயாளி பாவித்த படுக்கை உடுப்பு முதலிய சாமான்களை பழித்து அல்லது சுத்திசெய்து அவ்வீட்டையும் புகைப்போட்டுச் சுத்தஞ்செய்து வெள்ளையடித்தல் வேண்டும். அப்படிச்செய்யும் செலவு நகரசங்கத்தலைவர் கற்பிக்கிறபடி அரசாட்சியார் பொறுத்தல் வேண்டும். அப்படிப்பட்ட சதாரண விடுதிவீட்டை வைத்திருப்பவன் மறுபடியும் விடுதிகாரரைச் சேர்க்குமுன் நகரசுகவயித்தியரால் அல்லது அவருதவிகாரனால் அவ்விடத்தைச் சோதிப்பித்து தொற்றுநோய் வரக்கூடிய நிலையில் அவ்வீடிருக்க வில்லையென்று சேட்டிவிக்கற் பெறவேண்டும்.

296O. கக்கூசு வசதிகள்.—மேற்படி விடுதிவீடுகளிலுள்ள கக்கூசுகளெல்லாம் தினந்தோறும் வாளி வைத்தெடுக்கிற ஒழுங்குள்ளதாயிருத்தல் வேண்டும். அப்படி வீட்டுக்கு அவசரமென்று கண்டால் நகரசங்கத்தலைவர் இதற்கென்று நாள்தோறும் சம்பளம் கொடுக்கிற ஓர் கூலியை வைப்பார். ஒவ்வொரு பத்துப் பேருக்கும் குறைந்தபட்சம் ஒரு அளவு வாளியாவது இருத்தல் வேண்டும். நகரசங்கத்தலைவர் சொல்லுகிற பிரகாரம் கக்கூசு வசதியாயிருந்தால் தண்ணீர் வார்த்தையுமனுப்பபடும், எவ்விஷயத்திலும் சாதாரண விடுதிவீடு வைத்திருப்பவன் கக்கூசு வசதியாய் வைத்திருத்தல் வேண்டும்.

296P. தண்ணீர் வைத்தல்.—மேற்படி விடுதிவீடுகளெல்லாம் அவ்விடுதி வைத்திருப்பவனுடைய செலவால் போதியளவு தண்ணீர் வைக்கப்பட்டிருத்தல் வேண்டும். அத்தண்ணீரும் சுகமாவிலிருந்துவருந் தண்ணீராகவிருத்தல் வேண்டும்.

296Q. சோதனை பார்த்தல்.—மேற்படி வீடுகளை எந்த நேரத்திலும் இரவிலாவது பகலிலாவது நகரசங்க உத்தியோகஸ்தராவது இன்ஸ்பெக்டர் நிரைக்குக் குறையாத பொலிஸ் உத்தியோகஸ்தராவது போய்ச் சோதனைபண்ணலாம்.

296R. வரை விலக்கணம்.—சாதாரண விடுதிவீடென்பது ஒரே குடும்பத்தைச்சேராதவர்களாய் பத்து அல்லது அதற்கு மேற்பட்ட தொகையான ஆட்களிருக்கும் வீடேயாம், அல்லது அப்படி ஆட்களிருக்கும் ஓர் பாகமேயாம்.

வீட்டு வேலைக்காரர் அல்லது சாய்ப்பு வேலைக்காரரல்லாத வேறு வேலைக்காரரை எவராவது ஓர் நிலையான கட்டடத்தில் வைத்திருந்தால் அக்கட்டடமும் (சாதாரண விடுதிவீடாகும்).

சாதாரண விடுதிவீடு வைத்திருப்பவனென்பது உத்தரவுச்சீட்டுப் பெற்றுச் சாதாரண விடுதிவீடு வைத்திருப்பவனே

P. என்ற மாதிரி (XIX. A ம் அதிகாரம் 296 A ம் கீழ்ச்சட்டம்).

சாதாரண விடுதிவீடுகளைப்பற்றிய ரெஜிஸ்டர்.

| தேதி. | ரெஜிஸ்டர் நம்பர். | விடுதி வீடிருக்குமிடமும் தெருவும் நம்பரும். | படுக்கை அறைகளின் தொகை | குசினிகளின் தொகை. | அறைகளின் தொகை. | தண்ணீர் எவ்விதமாய் வைக்கப்பட்டிருக்கிறது. | பெறக்கூடிய விடுதிக்காரரின் பெருந்தொகை. | விடுதி வீட்டை வைத்திருப்பவர் பெயர். | பதிவுசெய்யு முத்தியோகஸ்தரின் கையொப்பம். |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | |

Q. என்ற மாதிரி XIX. A ம் அதிகாரம் 296 B ம் கீழ்ச்சட்டம்.

சாதாரண விடுதிவீடாகப் பாவிக்கக்கூடியதாய் ஒரு வீட்டைப் பதிவுசெய்விக்க விண்ணப்பம்.

இதன்கீழ் கையொப்பமிட்டிருக்கும் நான் 1897 ம் ஆண்டின் 3 ம் இலக்கக் கட்டளைச்சட்டத்தின்படி பின்னே சொல்லப்பட்டிருக்கும் வீட்டை ஒரு சாதாரண விடுதிவீடாகப் பதிவுசெய்யும்படி இத்தால் விண்ணப்பஞ்செய்கிறேன்.

கண்டி, 191— ம் ஆண்டு —— மீ —— த உ.

விண்ணப்பக்காரன் கையொப்பம் ——.
இருக்குமிடம் ——.

சாதாரண விடுதிவீடாகப் பதிவுசெய்யவிருக்கும் வீடிருக்குமிடம் } ——
சாதாரண விடுதிவீடாகப் பாவிக்கப்படவிருக்கும் தளங்களின் தொகை } ——
விடுதிக்காரருக்கு விடப்பட்ட அறைகளின் தொகை :—

1 ம் நம்பர் அறையின் விஸ்தாரம் கன அடி.
2 ம் டை. டை. டை.
3 ம் டை. டை. டை.

4 ம் நம்பர் அறையின் விஸ்தாரம் கன அடி.
5 ம் டை. டை. டை.
6 ம் டை. டை. டை.

பெரும்பு நகரசங்கத்தலைவருக்கு.

# LAND SALES.

## காணி விற்பனவுகள்.

No. 596, N. P.—1910 ம் ஆண்டு ஆடிமாதம் 12 ந் திகதி, 11 மணியளவில் தன் ஆபிஸில் வட மாகாணத்து கவர்ண்மேந்து ஏசன்றவர்களால் இதனடியிற் சொல்லப்பட்டிருக்கிற முடிக்குரிய காணித்துண்டுகள், அரசாட்சியாரால் உத்தரவுபண்ணப்பட்டிருக்கும் பொருத்தப்பிரகாரம் ஏலத்திற்கூறி விற்கப்படும், அல்லது உரித்து முடிவுபண்ணப்படும். 19 காணித்துண்டுகள் வட மாகாணத்து யாழ்ப்பாண டிஸ்திரிக்கின் பூநகரிப் பகுதியிலிருக்கின்றது.

பிளான் இல. 3,616. உரித்தாளி—அரசாட்சி.

குறிச்சி—மட்டுவில் நாடு. விவரம்—புகையிலைத்தோட்டம்.

| காணித்துண்டின் இல. | கேள்விக்காரன் பெயர். | | விசாலம். ஏ. | று. | பெ. | ரூ. |
|---|---|---|---|---|---|---|
| 13437 | கே. அம்பலவாணர் கூட்டிச்சேர்த்தது | | 0 | 0 | 4·87 | 20 |
| 13438 | வி. வேலுப்பிள்ளை | டிை. | 0 | 0 | 5·28 | 20 |
| 13439 | சேதுப்பிள்ளை | டிை. | 0 | 0 | 5·43 | 20 |
| 13440 | வள்ளியம்மை | டிை. | 0 | 0 | 7·31 | 20 |
| 13441 | எஸ். ஆறுமுகம் | டிை. | 0 | 0 | 3·81 | 20 |
| 13442 | கே. சிற்றம்பலம் | டிை. | 0 | 0 | 5·37 | 20 |
| 13443 | எம். கனகசபை | டிை. | 0 | 0 | 3·81 | 20 |
| 13444 | கே. விசுவநாதி | டிை. | 0 | 0 | 4·93 | 20 |
| 13445 | எஸ். கந்தையாவும் மறுபேரும் | டிை. | 0 | 0 | 3·31 | 20 |
| 13446 | எஸ். சின்னையா கூட்டிச்சேர்த்தது | | 0 | 0 | 2·15 | 20 |
| 13447 | எம். கனகசபை | டிை. | 0 | 0 | 2·50 | 20 |
| 13448 | எஸ். செல்லாச்சி | டிை. | 0 | 0 | 3·28 | 20 |
| 13449 | எஸ். சரவணை | டிை. | 0 | 0 | 2·15 | 20 |
| 13450 | எஸ். ஆறுமுகம் | டிை. | 0 | 0 | 2·21 | 20 |
| 13451 | எஸ். சின்னையா | டிை. | 0 | 0 | 1·75 | 20 |
| 13452 | எஸ். சரவணமுத்து | டிை. | 0 | 0 | 3 | 20 |
| 13453 | பிள்ளையார்கோவில் | டிை. | 0 | 0 | 29 71 | 10 |
| 13454 | சின்னையாவும் மறுபேரும் | டிை. | 0 | 0 | 22 50 | 10 |
| 13455 | எஸ். ஆறுமுகம் | | 0 | 1 | 29·75 | 15 |

இக்காணிகளைப்பற்றிய வேறே காரியங்கள் அறியவேணுமானால் வட மாகாணம் கவர்ண்மேந்து ஏசன்றவரிடத்திலும் படங்களைப்பற்றி அளவுகந்தோரின் பெரியதுரையிடத்திலும் அறிந்துகொள்ளலாம்.

எச். எல். கிறுவ்வோட்,
ஆக்டிங் இராசாங்க லிகிதர்.

கொலோனியல் சக்கிறத்தார் ஆபிஸில்,
கொழும்பில், 1910 ம் ஆண்டு வைகாசி (மே) மீ 17 ந் உ.

---

No. 1,951, N. W. P.—1910 ம் ஆண்டு ஆடிமாதம் 5 ந் திகதி, செவ்வாய்க்கிழமை, பகல் 1 மணிக்கு தன் ஆபிஸில் வடமேல் மாகாணத்து புத்தளம உதவி கவர்ண்மேந்து ஏசன்றவர்களால் இதனடியிற் சொல்லப்பட்டிருக்கிற முடிக்குரிய காணித்துண்டுகள், அரசாட்சியாரால் உத்தரவுபண்ணப்பட்டிருக்கும் பொருத்தப்பிரகாரம் ஏலத்திற்கூறி விற்கப்படும். 28 காணித்துண்டுகள், வடமேல் மாகாணத்து புத்தளம் டிஸ்திரிக்கின் கற்பிட்டி பகுதியிலும் புத்தளம்பற்றுப்பகுதியிலும் தெமலபத்துபகுதியிலுமிருக்கின்றது.

வட அக்கரைப்பற்று. பிளான் இல. 3,752. குறிச்சி—அம்பலம். உரித்தாளி—முடி.

| காணித்துண்டின் இல. | காணித்துண்டின் பெயர். | கேள்விக்காரனின் பெயர். | விவரம். | விசாலம். ஏ. | று. | ப. | ஏக்கருக்குமதி ரூ. |
|---|---|---|---|---|---|---|---|
| 16347 | பனைபடிகாடு | மொஹிதீன்கண்டு | முதுகாடு | 2 | 3 | 24 | 30 |
| 16348 | டிை. | — | ரோட்டுக்குச் சேர்த்திருக்கும் நிலம் | 0 | 0 | 24* | — |
| 16349 | டிை. | முகம்மது சுத்தி | முதுகாடு | 1 | 1 | 38 | 28 |
| 16350 | டிை. | சின்னமரைக்கார்லெவ்வை | டிை. | 1 | 3 | 28 | 28 |
| | பிளான் இல. 1,873. குறிச்சி—அம்பலம். உரித்தாளி—முடி. | | | | | | |
| W 811½ | அம்பலம்வயல் | மொஹிதீன் கண்டு | தண்ணீர்பிடி | 0 | 1 | 16 | 20 |
| | பிளான் இல. 3,702. குறிச்சி—வட்டபத்து. உரித்தாளி—முடி. | | | | | | |
| 16224 | வட்டக்கண்டல்காடு அல்லது வட்டபத்துகாடு | காசிமுத்து சின்னவாப்பு | முதுகாடு | 18 | 2 | 20 | 35 |
| 16225 | டிை. | — | ரோட்டுக்கு சேர்த்திருக்கும் நிலம் | 0 | 0 | 13* | — |
| 16226 | பாலமோட்டை மடு | காசிமுத்து சின்னவாப்பு | மடு | 0. | 0 | 18 | 20 |
| | தென் அக்கரைப்பற்றில். பிளான் இல. 3,817. குறிச்சி—பெரிய எத்தபளை. உரித்தாளி—முடி. | | | | | | |
| 69 | சந்திகாணி | வீரபத்திரன் பீஸ் ஒபிசர் | காடு | 4 | 0 | 30 | 55 |
| | பிளான் இல. 3,773. குறிச்சி—கட்டைக்காடு. உரித்தாளி—முடி. | | | | | | |
| 16461 | சின்னமிணிகாடு | மீதின்கண்டு பிச்சைத்தம்பி | காடு | 20 | 2 | 14 | 40 |
| | பிளான் இல 3,776. குறிச்சி—கட்டைக்காடு. உரித்தாளி—முடி. | | | | | | |
| 16472 | பரசஞ்சோலை | வி. பி. முத்துக்குமாரு | காடு | 37 | 2 | 35 | 45 |
| | பிளான் இல. 3,775. குறிச்சி—கனமூலை. உரித்தாளி—முடி. | | | | | | |
| 16469 | கொறவலைபதிச்சத்திவு | பீர்சாயிவு அசன்கண்டு | காடு | 2 | 1 | 20 | 42·50 |
| 16470 | டிை. | டிை. | காடு | 1 | 1 | 7 | 42·50 |
| 16471 | டிை. | டிை. | கேள்விக்காரனுல் பிடித்துண்டு பண்ணியிருக்கும் இரண்டு வருட தென்னஞ்செய்கை | 0 | 0 | 10 | 80 |
| | ராஜகுமாரவன்னியபற்றில். பிளான் இல. 3,778. குறிச்சி—வநணக்கட்டுவை. உரித்தாளி—முடி. | | | | | | |
| 16475 | பிலாக்காமடுவைகெலே | ஜே. டி. மர்த்தேலிஸ் | முதுகாடு | 12 | 3 | 6 | 70 |
| 16476 | டிை. | — | ரோட்டுக்கு சேர்த்திருக்கும் நிலம் | 0 | 0 | 18* | — |
| | பிளான் இல. 3,648. குறிச்சி—புலவிட்டிய. உரித்தாளி—முடி. | | | | | | |
| 16087 | புலவிட்டியகெலே | ச. மு. ஐயசிங்கியாமி | முதுகாடு | 4 | 2 | 0 | 35 |
| 16088 | டிை. | டிை. | பழைய சேனை | 0 | 1 | 18 | 15 |
| | பள்ளம்பற்றில். பிளான் இல. 3,700. குறிச்சி—பள்ளமை. | | | | | | |
| 16216 | அம்பகாபேன | வ. குணரத்தாமி | பத்தைக்காடு | 0 | 3 | 18 | 50 |
| 16217 | அம்பகாவத்தை | டிை. | பாலாவிட்ட தோட்டம் | 1 | 1 | 16 | 50 |
| | உரித்தாளி—முதலியாமி. | | | | | | |
| 16218 | டிை. | டிை. | மூன் றுவருட தென்னஞ்செய்கை | 0 | 0 | 28 | 50 |
| | உரித்தாளி—முடி. | | | | | | |
| 16219 | டிை. | டிை. | பத்தைக்காடு | 0 | 1 | 0 | 50 |
| | கிரிமெட்டியாபற்றில். பிளான் இல. 3,779. குறிச்சி—வழுனுவம்மை. உரித்தாளி—முடி. | | | | | | |
| 16477 | வழுனுகம்மைமருக்கவான | அப்புவகைஆரச்சியா | முதுகாடு | 3 | 0 | 18 | 35 |
| 16478 | டிை. | — | குளக்கட்டுக்கு சேர்த்திருக்கும் நிலம் | 0 | 3 | 4* | — |
| | பொலிவிபற்றில். பிளான் இல. 3,304. குறிச்சி—முக்சாவிலை. உரித்தாளி—முடி. | | | | | | |
| 14718 | அத்தாகாகெலே | புஞ்சிருலா | முதுகாடு | 1 | 1 | 18 | 27·50 |

*விற்பனவுக்கல்ல.

| காணித்துண்டின் இல. | காணித்துண்டின் பெயர். | கேள்விக்காரனின் பெயர். | விவரம். | விசாலம். ஏ. அ. பெ. | ஏக்கருக்கு மதிப்புவிலை ரூ. |
|---|---|---|---|---|---|
| 14719 | திவுல்காலத்தை | காதர்சா இமாம்சாயிவு | முதுகாடு | 5 1 8 | 27·50 |
| 14720 | தல்காலத்தை | டிக்கிருமெச்ச வண்டா | டை | 4 2 20 | 27 50 |
| | ராஜவன்னிபற்றில். பிளான் இல. 3,690. குறிச்சி—அத்தினிகம்மை. உரித்தாளி—முடி. | | | | |
| 16164 | பதுகாக்கும்புறை | சிராலேயும் அப்புஹாமியும் | முதுகாடு | 0 0 20 | 22 |

இந்தக்காணிகளைப்பற்றி மேலதிகமான விபரங்களை புத்தளம் கோவர்ண்மேந்து உதவி ஏஜன்றத்துரை யிடத்திலும் அவைகளின் பிளான்களை சருவேயர் ஜெனறல்துரை யிடத்திலும் பெற்றுக்கொள்ளலாம்.

கொலோனியல் சக்கிறத்தார் ஆபீசில்,
கொழும்பில், 1910 ம் ஞு மே(வைகாசி)மீ 18 ந் உ.

எச். எல். கிருக்வோட்,
சக்திக் இராசாங்க விதர்.

---

## LAND - ACQUISITION NOTICES.

### அரசாங்கியாரின் தேள்வைக்காகிய காணி விளம்பரங்கள்.

[Kalladi, Batticaloa District.]

1876 ம் ஞு-த்து 3 ம் இலக்கச்சட்டத்தினது 7ம் பிரிவின் பிரகாரம் பகிரங்கதேவைக்கு வேண்டியதான பின்னர்சொல்லப்படும் காணிகளை, அந்தாவது:—

பிரதமபடத்து இல. 4,150. குறிச்சி—கல்லடி. விவரம்—வளவு.

| துண்டு. | காணியினது பெயர். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. அ. பெ. |
|---|---|---|---|
| F | புறங்கிவளவு | கணபதிபிள்ளை சின்னத்தம்பி | 0 1 24·12 |
| G | டை | சின்னத்தம்பி வேலுப்பிள்ளை | 0 0 30·87 |
| H | வைகாவிவளவு | 1 காதர் மாரிமுத்து, 2 மாரிமுத்து கதிராமத்தம்பி, 3 பரமக்குட்டி கந்தப்பன், 4 பரமக்குட்டி பூதாத்தையும் புருஷனும், 5 வேலாயுதர், 6 கணபதிப்பிள்ளை தெய்வானை, 7 கணபதிப்பிள்ளை பெரியபிள்ளை, 8 முருகப்பர் கந்தப்பன், 9 கதிராமர் ஊடையாத்தை, 10 கதிராமர் சின்னப்பிள்ளை, 11 கதிராமர் பெண்ணம்மா, 12 கதிராமர் செல்லம்மா, 13 கதிராமர் கன்னுச்சிப்பிள்ளை | 0 2 38·62 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ஞு-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் மந்திராலோசனைச்சபையினது ஆலோசனையுடன் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனைசெய்திருப்பதனால், அக்காணிகளை ஆட்சிஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பகிரங்கமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிகளுக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர் மூலமாய் 1910 ம் ஞு ஆனிமீ 13 ந் தேதியிலன்று 10 மணிக்கு மட்டக்களப்புக் கச்சேரியில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணிகளிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனால் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

மட்டக்களப்புக் கச்சேரி,
1910 ம் ஞு வைகாசிமீ 13 ந் உ.

சி. குமாரசாமி,
அரசாட்சி ஏஜண்டுக்காக.

---

## PRELIMINARY NOTICES, WASTE LAND SETTLEMENT.

### உரிமைபெறும் பாழ்நிலத்தின் முன்னறிவித்தல்களைக் குறித்த விளம்பரங்கள்.

[Hambantota S. O. 36—1910.]

இதன்பின் சொல்லப்படும் காணிகளுள் ஒன்றிலேனும் பலவிலேனும் எவ்வித உடந்தையாயினும் தங்களுக்குண்டென உரித்துப்பேசுவோர்கள் யாருமிருந்தால், அவர்கள், 1910 ம் ஞு மே (வைகாசி)மீ 20 ந் தேதி தொடக்கம் மூன்று மாசத்திற்குள், 1897 முதல் 1903 ம் ஆண்டு வரையுள்ள பாழ்நிலச்சட்டங்களின் 28 ம் பிரிவின் பிரகாரம் ஏற்படுத்திய விசேஷ உத்தியோகத்தர் சி. வி. பிறேயின்துரை அவர்களிடம் கொழும்பு கோட்டையிலிருக்கும் அவருடைய கந்தோரில் முகாமுகமாயேனும் எழுத்துமூலமாயேனும் தங்களுக்குண்டெனும் உரித்தை அல்லது உடந்தையைத் தெரிவியாவிடில், சொல்லிய விசேஷ உத்தியோகத்தர் சொல்லிய சட்டங்களால் தமக்கு உண்டான அதிகாரத்தைக்கொண்டு சொல்லிய காணிகளை அல்லது அவைகளுள் உரித்துப்பேசப்படாதவற்றை முடிக்குரிய ஆதனமெனத் தமது கைச்சாத்திட்டு எழுத்து மூலமாய் வெளிப்படுத்துவார் என்பதை அறிந்துகொள்க.

சி. வி. பிறேயின்,
விசேஷ உத்தியோகத்தர்.

கட்டிய காணிகளின் விவரம்.

தென் மாகாணம் அம்பாந்தோட்டை டிஸ்திரிக்குக் கிறுவாப்பத்து கிழக்கைச்சேர்ந்த பெயிலியவில என்னும் கிராமத்தில் இத்துடன் சேர்க்கப்படும் *படப்பிரதிகளில் விவரித்தபடியே, கீழ்க்குறிக்கும் காணித்துண்டுகள்:—

I.—பிரதம படம் 465.

| காணித்துண்டு. | | காணியின் பெயர். | | | விசாலம் ஏ. அ. ப. |
|---|---|---|---|---|---|
| 10a | ... | கந்துரும்புதேகொடெல்ல (வாய்க்காலுக்காகச் சேமிக்கப்பட்ட காணி) | ... | ... | 0 0 35 |
| 10b | ... | கட்டுரும்புதேகொடெல்ல (ரோட்டுக்காகச் சேமிக்கப்பட்ட காணி) | ... | ... | 0 0 22 |
| | | | | | 0 1 17 |

எல்லைகளாவன: வடக்கு-பெரியவாய்க்கால்; கிழக்கு-முடி உரித்துப்பேசும் கங்கவருறமுல்லேரும்புவ, தங்காலையிலிருக்கும் திலவீரபத்துபெத்திக்க தோனிஸ்அப்புவுக்கும் இன்னொருவருக்கும் முடியால் விற்கப்பட்ட கங்கவருறகொறட்டுவ 266,894 ம் உரிமைப்பத்திரத்தில் கண்டிருக்கும் காணி); தெற்கு-தங்காலையிலிருக்கும் திலவீரபத்தபெத்திக்க தோனிஸ்அப்புவுக்கு முடியால விற்கப்பட்ட கட்டுரும்புறவும் முதலியனவும்; மேற்கு-ஊர் ரோட்டு.

II.—பிரதம படம் 465.

| காணித்துண்டு | | காணியின் பெயர். | | | | | விசாலம் ஏ. அ. பெ. |
|---|---|---|---|---|---|---|---|
| 50a | ... | எலஅத்தறகொடெல்ல | ... | ... | ... | ... | 1 3 12 |

எல்லைகளாவன: வடக்கும் கிழக்கும்-முடி உரித்துப்பேசும் எலஅத்தறகொடெல்ல (வாய்க்காலுக்காகச் சேமிக்கப்பட்ட காணி); தெற்கு-முடி உரித்துப்பேசும் ஒப்பிறயாய; மேற்கு-முடி உரித்துப்பேசும் எலஅத்தறகொடெல்ல (ரோட்டுக்காகச் சேமிக்கப்பட்ட காணி).

3,760

* இக்கிஸியின் நான்காம் பாகம் 690 ம் பக்கத்தின் படங்களைப் பார்க்க.

[Anuradhapura S. O. 10—1910.]

கீழ்ப்பின் சொல்லப்படும் காணிகளுள் ஒன்றிலேனும் பலவிலேனும் எவ்வித உடந்தையாயினுந் தங்களுக்குண்டென உரித்துப்பேசுவோர்கள் யாருமிருந்தால், அவர்கள், 1910 ம் ஆண்டு மே (வைகாசி)மீ 20 ந் தேதி துவக்கம் மூன்று மாசத்திற்குள், 1897 முதல் 1903 ம் ஆண்டு வரையுள்ள பாழ்நிலச்சட்டங்களின் 28 ம் பிரிவின் பிரகாரம் ஏற்படுத்திய விசேஷ உத்தியோகத்தர் ஜோன் இஸ்திலதுரை அவர்களிடம் கொழும்பு கோட்டையிலிருக்கும் அவருடைய கந்தோரில் முகாமுகமாயேனும் எழுத்து மூலமாயேனுந் தங்களுக்குண்டெனும் உரித்தை அல்லது உடந்தையைத் தெரிவியாவிடில், சொல்லிய விசேஷ உத்தியோகத்தர் சொல்லிய சட்டங்களால் தமக்கு உண்டாய அதிகாரத்தைக்கொண்டு சொல்லிய காணிகளை அல்லது அவைகளுள் உரித்துப்பேசப்படாதவைகளை முடிக்குரிய ஆதனமெனத் தமது கைச்சாத்திட்டு எழுத்து மூலமாய் வெளிப்படுத்துவார் என்பதை அறிந்துகொள்க.

ஜோன் இஸ்திரில்,
விசேஷ உத்தியோகத்தர்.

சுட்டிய காணிகளின் விபரம்.

வடமத்திய மாகாணம் நுவரகாம்பளாத்தைக் கடவத்கோறளையிலிருக்கும் வீரசோலகடவத்துளானையைச்சேர்ந்த யக்காவெவ என்னும் கிராமத்திலுள்ள இத்துடன் இணைக்கப்படும் *படப்பிரதியில் விவரித்தபடியே, நிற்குறிக்கும் காணித்துண்டுகள் :—

பிரதம படம் 527.

| காணித்துண்டு. | காணியின் பெயர். | விசாலம் ஏ. | அ. | ப. |
|---|---|---|---|---|
| 6 | யக்காவெவேதிஸ்பம்ப | 2 | 3 | 4 |
| 6a | யக்காவெவேதிஸ்பம்ப (குளக்கட்டுக்காகச் சேமிக்கப்பட்ட காணி) | 0 | 3 | 19 |
| | | 3 | 2 | 23 |

எல்லைகளாவன: வடக்கு-முடி உரித்துப்பேசும் ஆண்டியாமாகலகாவலுக்கலான, முடி உரித்துப்பேசும் ஆண்டியாமாகலகாவலுக்கலான (குளக்கட்டுக்காகச் சேமிக்கப்பட்ட காணி); கிழக்குந் தெற்கும்-யக்கவெவ என்னுங் குளம்; மேற்கு-வக்கல என்னும் நீரோடை, மகாஎல என்னும் நீரோடை.

கவனிப்பு.—மேற்சொல்லிய எல்லைகளுக்குட்பட்டவையாக இருக்கும் நிற்குறிக்கும் காணித்துண்டுகள் இவ்வறிவித்தலில் நின்று நீக்கப்பட்டிருக்கின்றனவென்பதையும், அவைகளின் விசாலத்தொகையாகும் 3 ஏக்கர் 3 றூட் 2 பேர்ச்சின் ஒரு பகுதியாகுதல் முன்குறித்த 3 ஏக்கர் 3 றூட் 23 பேர்ச்சுக்குள் அடங்கவில்லையென்பதையுங் கவனிக்கவேண்டியது:—

பிரதம படம் 527.

| காணித்துண்டு. | காணியின் பெயர். | விசாலம் ஏ. | அ. | ப. |
|---|---|---|---|---|
| 6b | யக்காவெவதிஸ்பம்ப | 0 | 0 | 16 |
| 7 | பொல்கஸ்வத்தை, வீரகாவத்தை | 3 | 2 | 26 |
| | | 3 | 3 | 2 |

3,761

* இலங்கையின் நான்காம் பாகம் 691 ம் பக்கத்தின் படத்தைப் பார்க்க.

---

[Tender for supplying cooked provisions with milk to the Dambulla Hospital.]

தம்புளை ஆசுப்பத்திரிக்கு ஒரு வருஷம் அதாவது 1910 ம் ஆண்டு ஜூலைமீ 1 ந் திகதி துவக்கம் 1911 ம் ஆண்டு ஜூனிமீ 30 ந் திகதி வரைக்கும் பாலுடன் தேவையான சமைத்த சாப்பாட்டுச்சாமான்களைக் கொந்திறாத்து ஒப்பந்தம் செய்ய விருப்பமுள்ளவர்கள் ஒப்பந்தக் கேள்விக்கடதாசி அனுப்பும்படி இத்தால் கேட்கப்பட்டிருக்கின்றது.

2. கொந்திறாத்து ஒப்பந்தக் கேள்விகளை இரண்டு கொப்பிகளில் எழுதி ஒரே தபாலுறையில் வைத்து முத்திரையிட்டு, "கொந்திறாத்து ஒப்பந்த விசாரணைச் சங்கத்தலைவர் (The Chairman of the Tender Board) அரசிறை வருமானத்தலைவர் கந்தோர் (Office of the Controller of Revenue) கொழும்பு" என்று மேல்விலாசமும் எழுதி அனுப்பல் வேண்டும்.

3. கேள்விக்கடதாசிகளை அரசிறைவருமானத்தலைவர் கந்தோரில் இதற்காக வைக்கப்பட்டிருக்கும் பெட்டியிற் போடவேண்டும் அல்லது தபால்மார்க்கமாய் அங்கே அனுப்பவேண்டும்.

4. கேள்விக்கடதாசிகள் அனுப்பப்படும் உறையின் புறத்தில் இடதுகை மேல்மூலையில் "தம்புளை (Dambulla) ஆசுப்பத்திரிக்குச் சாப்பாட்டுச் சாமான்கள் கொடுத்தற்காக அனுப்பப்படும் ஒப்பந்தக் கேள்விக்கடதாசி" என்று எழுதல்வேண்டும். கேள்விக்கடதாசிகள் அரசிறைவருமானத்தலைவர் கந்தோரில் 1910 ம் ஆண்டு வைகாசிமீ 26 ந் திகதி மத்தியானத்துக்கும் பிந்தாமல் சேரல்வேண்டும்.

5. அச்சிட்ட கொந்திறாத்து ஒப்பந்தக்கேள்விக்கடதாசிகளில் மாத்திரம் ஒப்பந்தக் கேள்விகள் எழுதி அனுப்பவேண்டும். இந்தக் கேள்விப்பத்திரங்கள் கொழும்பு பிரதான சிவில் மெடிக்கல் ஆபிசில் பெற்றுக்கொள்ளலாம். அரசிட்டு இதற்கென்று நியமிக்கப்பட்டிருக்கும் கேள்விப்பத்திரத்தில் எழுதப்படாத கேள்விகள் கவனிக்கப்படமாட்டா. இந்தக் கேள்விப்பத்திரத்தில் யாதேனும் மாற்றங்கள் செய்தால் அம்மாற்றங்களுக்கு ஒப்பந்தக்கேள்விக்காரன் கையொப்பமிடல் வேண்டும். அப்படிச் செய்யத்தவறினால் கேள்வி சரியீனமாகக்கண்டு ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

6. அச்சிட்ட ஒப்பந்தக் கேள்விப்பத்திரம் பெறவிரும்புவோர் ஒவ்வொருவரும் இருநூறு ரூபா முற்பணமாகக் கச்சேரியில் கட்டிப் பற்றுச்சீட்டுக் கொண்டுவரல்வேண்டும். கொந்திறாத்துக் கேள்விகள் எழுதியனுப்பினதன்மேல் யாராகுதல் கொந்திறாத்தைக் கையேற்க அல்லது தக்கபிணை கொடுக்கத் தவறினால், அவரால் முற்பணமாகக் கட்டப்பட்ட காசு முடிக்காயிடும். கொந்திறாத்து ஒப்பந்தம் தீர்ந்து ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒப்பந்தக்காரன் கையொப்பம் வைத்தபின்மேல், ஏற்றுக்கொள்ளப்படாத மற்றக் கொந்திறாத்துக் கேள்விக்காரர் கட்டிய பணத்தொகை முழுவதும் அவர்களுக்குக் கொடுக்கப்படும்.

7. சாமான் மாதிரிகள் கேட்கும்போது கொடுக்கவேண்டும்.

8. ஏற்றுக்கொள்ளப்பட்ட கொந்திறாத்து ஒப்பந்தக்காரன் பணப்பிணை ரூபா நாறூறு கொடுக்கவும் ஒப்பந்தத்தைச்சேர்ந்த உறுதிக்குக் கையொப்பம் வைக்கவும் வேண்டும். கேள்விப்பத்திரத்தின்பேரால் முற்பணமாகக் கட்டிய தொகை பிணையின் ஒரு பகுதியாகக்கவனிக்கப்படும். இன்னும் தேவையான விபரங்கள் பிரதான சிவில் மெடிக்கல் ஆபிசரிடம் பெற்றுக்கொள்ளலாம்.

9. மேற்கூறிப்போந்த பொருத்தங்கள் எல்லாவற்றிற்கும் அமையாத ஒப்பந்தக்கேள்வி ஒன்றும் அங்கீகரிக்கப்படமாட்டாது.

10. ஒப்பந்தக்கேள்விகளில் யாதேனும் ஒன்றையாவது அல்லது முழுமையையாவது ஏற்றுக்கொள்ளாது தள்ளும் உரித்தும் அவைகளில் ஒரு பகுதியை ஏற்றுக்கொள்ளும் உரித்தும் கவர்மேந்தாருக்குண்டு.

11. இன்னும் தேவையான விபரங்களை கொழும்பு பிரதான சிவில் மெடிக்கல் ஆபிசரிடம் பெற்றுக்கொள்ளலாம்.

(கையொப்பம்) சி. பீ. கிரிவ்வின்,
பிரதான சிவில் மெடிக்கல் ஆபிசருக்காக

கொழும்பு, 1910 ம் ஆண்டு சித்திரைமீ 28 ந் உ.

[Tenders for supplying certain Drugs to the Civil Medical Stores, Colombo.]

கொழும்பு சிவில் மெடிக்கல் ஸ்ரோருக்கு ஒரு வருஷம் அதாவது 1910 ம் ௵ ஆடி மீ 1 ந் தேதி துவக்கம் 1911 ம் ௵ ஆனி மீ 30 ந் தேதி வரைக்கும் சில மருந்துச் சாமான்கள் ஒப்பந்தஞ்செய்ய விருப்பமுள்ளவர்கள் ஒப்பந்தக் கேள்விக்கடாதி அனுப்பும்படி இத்தால் கேட்கப்பட்டிருக்கின்றது.

2. கோத்திருத்த ஒப்பந்தக்கேள்விகளை இரண்டு கொப்பிகளில் எழுதி ஒரே தபாலுறையில் வைத்து முத்திரையிட்டு "பிரதான சிவில் மெடிக்கல் ஆபிசர், கொழும்பு" என்று மேல்விலாசமும் எழுதி அனுப்பல் வேண்டும்.

3. கேள்விக்கடுதாசிகளை கொழும்பு பிரதான சிவில் மெடிக்கல் ஆபிசர் கந்தோரில் இதற்காக வைக்கப்பட்டிருக்கும் பெட்டியிற் போடவேண்டும், அல்லது தபால்மார்க்கமாய் அங்கே அனுப்பவேண்டும்.

4. கேள்விக்கடுதாசிகள் அனுப்பப்படும் உறையின் புறத்தில் இடதுகை மேல்மூலையில் "சிவில் மெடிக்கல் ஸ்ரோருக்கு சில மருந்துச் சாமான்கள் கொடுத்தற்கு அனுப்பப்படும் ஒப்பந்தக் கேள்விக்கடுதாசி" என்று எழுதல் வேண்டும். கேள்விக்கடுதாசிகள் கொழும்பு பிரதான சிவில் மெடிக்கல் ஆபிசர் கந்தோரில் 1910 ம் ௵ வைகாசி மீ 31 ந் தேதி மத்தியானத்திற்குப் பிந்தாமல் சேரல் வேண்டும்.

5. அச்சிட்ட கோத்திருத்த ஒப்பந்தக் கேள்விக்கடுதாசிகளில் மாத்திரம் ஒப்பந்தக்கேள்விகள் எழுதி அனுப்ப வேண்டும். இந்தக் கேள்விப்பத்திரங்கள் கொழும்பு பிரதான சிவில் மெடிக்கல் ஆபிசில் பெற்றுக்கொள்ளலாம். அச்சிட்டு இதற்கென்று நியமிக்கப்பட்டிருக்கும் கேள்விப்பத்திரத்தில் எழுதப்படாத கேள்விகள் கவனிக்கப்படமாட்டா. இந்தக்கேள்விப்பத்திரத்தில் யாதேனும் மாற்றங்கள் செய்தால் அம்மாற்றங்களுக்கு ஒப்பந்தகேள்விக்காரன் கையொப்பமிடல் வேண்டும். அப்படிச்செய்ய தவறினால் கேள்வி சரியினமாகக்கண்டு ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

6. அச்சிட்ட ஒப்பந்தக் கேள்விப்பத்திரம் பெறவிரும்புவோர் ஒவ்வொருவரும் முற்பணம் ரூபா 50 கச்சேரியில் கட்டிப் பற்றுச்சீட்டுக் கொண்டுவரல் வேண்டும். கோத்திருத்தக் கேள்விகள் எழுதி யனுப்பினதன்மேல் யாராகுதல் கோத்திருத்தைக் கைவிட்டேற்க அல்லது தக்கபிணை கொடுக்கத்தவறினால், அவரால் முற்பணமாகக் கட்டப்பட்ட காசு முடக்காய்விடும். கோத்திருத்த ஒப்பந்தந் தீர்ந்து ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒப்பந்தக்காரன் கையொப்பம் வைத்ததன்மேல், ஏற்றுக்கொள்ளப்படாத மற்றக் கோத்திருத்தக் கேள்விக்காரர் கட்டிய பணத்தொகை முழுவதும் அவர்களுக்குக் கொடுக்கப்படும்.

7. தேவையானால் மாதிரிச் சாமான்கள் கொடுத்தல்வேண்டும்.

8. ஏற்றுக்கொள்ளப்பட்ட கோத்திருத்த ஒப்பந்தக்காரன் ரூபா 100 பணப்பிணை கொடுக்கவும் ஒப்பந்தத்தைச்சேர்ந்த உறுதிக்குக் கையொப்பம் வைக்கவும் வேண்டும். கேள்விப்பத்திரத்தின்பேரால் முற்பணமாகக் கட்டியதொகை பிணையில் ஓர் பகுதியாகக் கவனிக்கப்படும்.

9. மேற்கூறிப்போந்த பொருத்தங்கள் எல்லாவற்றிற்கும் அமையாத ஒப்பந்தக்கேள்வி ஒன்றும் அங்கீகரிக்கப்படமாட்டாது.

10. ஒப்பந்தக்கேள்விகளில் யாதேனும் ஒன்றையாவது அல்லது முழுமையையாவது ஏற்றுக்கொள்ளாது தள்ளும் உரித்தும் அவைகளில் ஒரு பகுதியை ஏற்றுக்கொள்ளும் உரித்தும் கவர்ணமேந்தாருக்குண்டு.

11. இன்னும் தேவையான விவரங்களைப் பிரதான சிவில் மெடிகல் ஆபிசரிடம் பெற்றுக்கொள்ளலாம்.

(கையொப்பம்) சி. தீ. கிறிவ்வின்,
பிரதான சிவில் மெடிக்கல் ஆபிசருக்காக.

கொழும்பு, 1910 ம் ௵ சித்திரை மீ 30 ந் உ.

---

[Tenders for supplying Sherry Wine to the Civil Medical Stores, Colombo.]

கொழும்பு சிவில் மெடிக்கல் ஸ்ரோருக்கு ஒரு வருஷம் அதாவது 1910 ம் ஆண்டு ஆடி மீ 1 ந் தேதி துவக்கம் 1911 ம் ஆண்டு ஆனி மீ 30 ந் தேதி வரைக்கும் தேவையான ஷெரி உவைனின் கொடுத்த ஒப்பந்தஞ்செய்ய விருப்பமுள்ளவர்கள் ஒப்பந்தக்கேள்விக்கடாதி அனுப்பும்படி இத்தால் கேட்கப்பட்டிருக்கின்றது.

2. கோத்திருத்த ஒப்பந்தக்கேள்விகளை இரண்டு கொப்பிகளில் எழுதி ஒரே தபாலுறையில் வைத்து முத்திரையிட்டு "பிரதான சிவில் மெடிக்கல் ஆபிசர் கந்தோர் கொழும்பு" என்று மேல்விலாசம் எழுதி அனுப்பல்வேண்டும்.

3. கேள்விக்கடுதாசிகளை பிரதான சிவில் மெடிக்கல் ஆபிசர் கந்தோரில் இதற்காக வைக்கப்பட்டிருக்கும் பெட்டியிற் போடவேண்டும், அல்லது தபால் மார்க்கமாய் அங்கே அனுப்பவேண்டும்.

4. கேள்விக்கடுதாசிகள் அனுப்பப்படும் உறையின் புறத்தில் இடதுகை மேல்மூலையில் "சிவில் மெடிக்கல் ஸ்ரோருக்கு ஷெரி உவைனின் கொடுக்கிறதற்கு அனுப்பப்படும் ஒப்பந்தக் கேள்விக்கடுதாசி" என்று எழுதல் வேண்டும். கேள்விக்கடுதாசிகள் பிரதான சிவில் மெடிக்கல் ஆபிசர் கந்தோரில் 1910 ம் ௵ வைகாசி மீ 31 ந் தேதி மத்தியானத்துக்குப் பிந்தாமல் சேரல்வேண்டும்.

5. அச்சிட்ட கோத்திருத்த ஒப்பந்தக் கேள்விக்கடுதாசிகளில் மாத்திரம் ஒப்பந்தக் கேள்விகள் எழுதி அனுப்பவேண்டும். இந்தக் கேள்விப்பத்திரங்கள் கொழும்பு பிரதான சிவில் மெடிக்கல் ஆபிசில் பெற்றுக்கொள்ளலாம். அச்சிட்டு இதற்கென்று நியமிக்கப்பட்டிருக்கும் கேள்விப்பத்திரத்தில் எழுதப்படாத கேள்விகள் கவனிக்கப்படமாட்டா. இந்தக்கேள்விப் பத்திரத்தில் யாதேனும் மாற்றங்கள் செய்தால் அம்மாற்றங்களுக்கு ஒப்பந்தக் கேள்விக்காரன் கையொப்பமிடல் வேண்டும். அப்படிச்செய்ய தவறினால், கேள்வி சரியினமாகக்கண்டு ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

6. அச்சிட்ட ஒப்பந்தக் கேள்விப்பத்திரம் பெறவிரும்புவோர் ஒவ்வொருவரும் முற்பணம் ரூபா 50 கச்சேரியிற் கட்டிப் பற்றுச்சீட்டுக் கொண்டுவரல்வேண்டும். கோத்திருத்தக் கேள்விகள் எழுதி யனுப்பினதன்மேல் யாராகுதல் கோத்திருத்தைக் கைவிட்டேற்க அல்லது தக்கபிணை கொடுக்கத்தவறினால், அவரால் முற்பணமாகக் கட்டப்பட்ட காசு முடக்காய்விடும். கோத்திருத்த ஒப்பந்தந் தீர்ந்து ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒப்பந்தக்காரன் கையொப்பம் வைத்ததன்மேல், ஏற்றுக்கொள்ளப்படாத மற்றக் கோத்திருத்த கேள்விக்காரர் கட்டிய பணத்தொகை முழுவதும் அவர்களுக்குக் கொடுக்கப்படும்.

7. தேவையானால் மாதிரிக்கு உவைனின் காட்டல்வேண்டும்.

8. ஏற்றுக்கொள்ளப்பட்ட கோத்திருத்த ஒப்பந்தக்காரன் ரூபா 100 பணப்பிணை கொடுக்கவும் ஒப்பந்தத்தைச்சேர்ந்த உறுதிக்குக் கையொப்பம் வைக்கவும் வேண்டும். கேள்விப்பத்திரத்தின்பேரால் முற்பணமாகக் கட்டியதொகை பிணையில் ஓர் பகுதியாகக் கவனிக்கப்படும்.

9. மேற்கூறிப்போந்த பொருத்தங்கள் எல்லாவற்றிற்கும்அமையாத ஒப்பந்தக்கேள்வி ஒன்றும் அங்கீகரிக்கப்படமாட்டாது

10. ஒப்பந்தக்கேள்விகளில் யாதேனும் ஒன்றையாவது அல்லது முழுமையையாவது ஏற்றுக்கொள்ளாது தள்ளும் உரித்தும் அவைகளில் ஒரு பகுதியை ஏற்றுக்கொள்ளும் உரித்தும் கவர்ணமேந்தாருக்குண்டு.

11. இன்னும் தேவையான விவரங்களைப் பிரதான சிவில் மெடிக்கல் ஆபிசரிடம் பெற்றுக்கொள்ளவும்.

(கையொப்பம்) சி. தீ. கிறிவ்வின்,
பிரதான சிவில் மெடிக்கல் ஆபிசருக்காக.

கொழும்பு, 1910 ம் ௵ ஏப்றல் (சித்திரை) மீ 30 ந் தேதி.

---

[Tenders for supplying Ice and Aerated Waters to Colombo Hospitals.]

கொழும்பிலுள்ள ஆசுப்பத்திரிகளுக்கு ஒரு வருஷம் அதாவது 1910 ம் ௵ ஆடி மீ 1 ந் தேதி துவக்கம் 1911 ம் ௵ ஆனி மீ 30 ந் தேதி வரைக்கும் தேவையான ஐசும் ஏரிவேட்டற் உவாட்டரும் (Ice and Aerated Waters) ஒப்பந்தஞ் செய்ய விருப்பமுள்ளவர்கள் ஒப்பந்தக் கேள்விக்கடாதி அனுப்பும்படி இத்தால் கேட்கப்பட்டிருக்கின்றது.

2. கோத்திருத்த ஒப்பந்தக் கேள்விகளை இரண்டு கொப்பிகளில் எழுதி ஒரே தபாலுறையில் வைத்து முத்திரையிட்டு "பிரதான சிவில் மெடிக்கல் ஆபிசர் கந்தோர் கொழும்பு" என்று மேல்விலாசமும் எழுதி அனுப்பல் வேண்டும்.

3. கேள்விக்கடுதாசிகளை பிரதான சிவில் மெடிக்கல் ஆபிசர் கந்தோரில் இதற்காக வைக்கப்பட்டிருக்கும் பெட்டியிற் போடவேண்டும் அல்லது தபால்மார்க்கமாய் அங்கே அனுப்பவேண்டும்.

4. கேள்விக்கடதாசிகளை அனுப்பப்படும் உறையின் புறத்தில் இடதுகை மேல்மூலையில் ஐசும் எறிகட்டும் உண்டாக்கும் (Ice and Aerated Waters) கொடுத்தற்காக அனுப்பப்படும் ஒப்பந்தக் கேள்விக்கடதாசி என்று எழுதல் வேண்டும். கேள்விக்கடதாசிகள் பிரதான சிவில் மெடிக்கல் ஆபிசர் கந்தோரில் 1910 ம் ஆண்டு வைகாசி மீ 31 ந் தேதி மத்தியானத்துக்குப் பிந்தாமல் சேரல்வேண்டும்.

5. அச்சிட்ட கொந்திறத்து ஒப்பந்தக் கேள்விக்கடதாசிகளில் மாத்திரம் ஒப்பந்தக் கேள்விகள் எழுதி அனுப்ப வேண்டும். இந்தக் கேள்விப்பத்திரங்கள் கொழும்பு பிரதான சிவில் மெடிக்கல் ஆபிசில் பெற்றுக்கொள்ளலாம். அச்சிட்டு இதற்கென்று நியமிக்கப்பட்டிருக்கும் கேள்விப்பத்திரத்தில் எழுதப்படாத கேள்விகள் கவனிக்கப்படமாட்டா. இந்தக் கேள்விப்பத்திரத்தில் யாதேனும் மாற்றங்கள் செய்தால் அம்மாற்றங்களுக்கு ஒப்பந்தக்கேள்விக்காரன் கையொப்பமிடல் வேண்டும். அப்படிச்செய்ய தவறினால், கேள்வி சரியீனமாகக்கண்டு ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

6. அச்சிட்ட ஒப்பந்தக் கேள்விப்பத்திரம் பெறவிரும்புவோர் ஒவ்வொருவரும் முற்பணம் ரூபா 50 கச்சேரியில் கட்டிப் பற்றுச்சீட்டுக் கொண்டுவரல் வேண்டும். கொந்திறத்துக் கேள்விகள் எழுதி யனுப்பினதன்மேல் யாராகுதல் கொந்திறத்தைக் கையேற்க அல்லது அல்லது தக்கபிணை கொடுக்கத் தவறினால், அவரால் முற்பணமாகக் கட்டப்பட்ட காசு முடிக்கப்படும். கொந்திறத்து ஒப்பந்தம் தீர்ந்து ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒப்பந்தக்காரன் கையொப்பம் வைத்ததன்மேல், ஒத்துக்கொள்ளப்படாத மற்றக் கொந்திறத்துக் கேள்விக்காரர் கட்டிய பணத்தொகை முழுவதும் அவர்களுக்குக் கொடுக்கப்படும்.

7. ஏற்றுக்கொள்ளப்பட்ட கொந்திறத்து ஒப்பந்தக்காரன் ரூபா 100 பணப்பிணை கொடுக்கவும் ஒப்பந்தத்தைச் சேர்ந்த உறுதிக்குக் கையொப்பம் வைக்கவும் வேண்டும். கேள்விப்பத்திரத்தின்போரல் முற்பணமாகக் கட்டியதொகை பிணையில் ஓர் பகுதியாகக் கவனிக்கப்படும்.

8. மேற்கூறிப்போந்த பொருத்தங்கள் எல்லாவற்றிற்கும் அமையாத ஒப்பந்தக்கேள்வி ஒன்றும் அங்கீகரிக்கப்படமாட்டாது.

9. ஒப்பந்தக்கேள்விகளில் யாதேனும் ஒன்றையாவது அல்லது முழுமையையாவது ஏற்றுக்கொள்ளாது தள்ளும் உரித்தும் அவைகளில் ஒரு பகுதியை ஏற்றுக்கொள்ளும் உரித்தும் கவர்ணமேந்தாருக்குண்டு.

10. இன்னும் தேவையான விபரங்களைப் பிரதான சிவில் மெடிக்கல் ஆபிசரிடம் பெற்றுக்கொள்ளலாம்.

(கையொப்பம்) சீ. தீ. ஒறிவின்,
பிரதான சிவில் மெடிக்கல் ஆபிசருக்காக.

கொழும்பு, 1910 ம் ஆண்டு சித்திரை மீ 30 ந் உ.

---

[Tenders for the transport of Stores from Hatton, Civil Medical Department.]

ஹெட்டன் தோட்டம் (Hatton) என்ற இடத்திலிருந்து ஒரு வருஷம் அதாவது 1910 ம் ஆண்டு ஜூலை மீ 1 ந் திகதி தொடக்கம் 1911 ம் ஆண்டு ஜூனி மீ 30 ந் திகதி வரைக்கும் சாமான் ஏற்றுமதிக் கொந்திறத்து ஒப்பந்தஞ்செய்ய விருப்புள்ளவர்கள் ஒப்பந்தக்கேள்விக்கடதாசி அனுப்பும்படி இத்தால் கேட்கப்பட்டிருக்கின்றது.

2. கொந்திறத்து ஒப்பந்தக்கேள்விகளை இரண்டு கொப்பிகளில் எழுதி ஒரே தபாலுறையில் வைத்து முத்திரையிட்டு "பிரதான சிவில்மெடிக்கல் ஆபிசர் கந்தோர் கொழும்பு" என்று மேல்விலாசமும் எழுதி அனுப்பல்வேண்டும்.

3. கேள்விக்கடதாசிகளை பிரதான சிவில் மெடிக்கல் ஆபிசர் கந்தோரில் இதற்காக வைக்கப்பட்டிருக்கும் பெட்டியிற் போடவேண்டும், அல்லது தபால் மார்க்கமாய் அங்கே அனுப்பவேண்டும்.

4. கேள்விக்கடதாசிகள் அனுப்பப்படும் உறையின் புறத்தில் இடதுகை மேல்மூலையில் "ஹெட்டன் தோட்டத்திலிருந்து சாமான்கள் ஏற்றுமதிசெய்து கொடுத்தற்காக அனுப்பப்படும் ஒப்பந்தக் கேள்விக்கடதாசி" என்று எழுதல் வேண்டும். கேள்விக்கடதாசிகள் பிரதான சிவில் மெடிக்கல் ஆபிசர் கந்தோரில் 1910 ம் ஆண்டு வைகாசி மீ 3 ந் திகதி மத்தியானத்துக்குப் பிந்தாமல் சேரல்வேண்டும்.

5. அச்சிட்ட கொந்திறத்து ஒப்பந்தக் கேள்விக்கடதாசிகளில் மாத்திரம் ஒப்பந்தக் கேள்விகள் எழுதி அனுப்ப வேண்டும். இந்தக் கேள்விப்பத்திரங்கள் கொழும்பு பிரதான சிவில் மெடிக்கல் ஆபிசில் பெற்றுக்கொள்ளலாம். அச்சிட்டு இதற்கென்று நியமிக்கப்பட்டிருக்கும் கேள்விப்பத்திரத்தில் எழுதப்படாத கேள்விகள் கவனிக்கப்படமாட்டா. இந்தக்கேள்விப்பத்திரத்தில் யாதேனும் மாற்றங்கள் செய்தால் அம்மாற்றங்களுக்கு ஒப்பந்தக் கேள்விக்காரன் கையொப்பமிடல்வேண்டும். அப்படிச்செய்ய தவறினால், கேள்வி சரியீனமாகக்கண்டு ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

6. அச்சிட்ட ஒப்பந்தக்கேள்விப்பத்திரம் பெறவிரும்புவோர் ஒவ்வொருவரும் முற்பணம் ரூபா 50 கச்சேரியில் கட்டிப் பற்றுச்சீட்டுக் கொண்டுவரல்வேண்டும். கொந்திறத்துக் கேள்விகள் எழுதியனுப்பினதன்மேல் யாராகுதல் கொந்திறத்தைக் கையேற்க அல்லது தக்க பிணை கொடுக்கத்தவறினால், அவரால் முற்பணமாகக் கட்டப்பட்ட காசு முடிக்கப்படும். கொந்திறத்து ஒப்பந்தம் தீர்ந்து ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒப்பந்தக்காரன் கையொப்பம் வைத்ததன்மேல் ஒத்துக்கொள்ளப்படாத மற்றக்கொந்திறத்துக் கேள்விக்காரர் கட்டிய பணத்தொகை முழுவதும் அவர்களுக்குக் கொடுக்கப்படும்.

7. ஏற்றுக்கொள்ளப்பட்ட கொந்திறத்து ஒப்பந்தக்காரன் ரூபா 100 பணப்பிணை கொடுக்கவும் ஒப்பந்தத்தைச் சேர்ந்த உறுதிக்குக் கையொப்பம் வைக்கவும் வேண்டும். கேள்விப்பத்திரத்தின்போரல் முற்பணமாகக் கட்டியதொகை பிணையில் ஓர் பகுதியாகக் கவனிக்கப்படும்.

8. மேற்கூறிப்போந்த பொருத்தங்கள் எல்லாவற்றிற்கும் அமையாத ஒப்பந்தக்கேள்வி ஒன்றும் அங்கீகரிக்கப்படமாட்டாது.

9. ஒப்பந்தக்கேள்விகளில் யாதேனும் ஒன்றையாவது அல்லது முழுமையையாவது ஏற்றுக்கொள்ளாது தள்ளும் உரித்தும் அவைகளில் ஒரு பகுதியை ஏற்றுக்கொள்ளும் உரித்தும் கவர்ணமேந்தாருக்குண்டு.

10. இன்னும் தேவையான விபரங்களை பிரதான சிவில் மெடிக்கல் ஆபிசரிடம் பெற்றுக்கொள்ளவும்.

(கையொப்பம்) சீ. தீ. ஒறிவின்,
பிரதான சிவில்மெடிக்கல் ஆபிசருக்காக

கொழும்பு, 1910 ம் ஆண்டு வைகாசி மீ 9 ந் உ.

[Tender for transporting Salt from Karaiur to Mullaitivu Salt Stores.]

இத்தாற் சகலரு மறியவும் 3000 அந்தர் உப்பு காரயூரிலிருந்து முல்லைத்தீவுக்கு ஏற்றிக்கொண்டு போய்க் கொடுக்க விரும்புபவர்கள் கேள்விப்பத்திரங்கள் அனுப்பலாம். ஒப்பந்தம் எடுக்கிறவர் இந்த ஆண்டு வைகாசி (மேமாதம்) 31 ந் திகதிக்குள் முழு உப்பையும் ஏற்றவேணும்.

2. எல்லாக் கேள்விப்பத்திரங்களும் இணைப்பிரதிகளாக ஒட்டி முத்திரைவைத்து மேல்விலாச மிட்டிருக்க வேணும்.

(a) மூலப்பிரதியில் வடமாகாணம் கவர்ண்மேந்து ஏசெண்றவுக்கு மேல்விலாச மெழுதுக.
(b) இணைப்பிரதியில் கொழும்பு அரசிறைவருமான காரியஸ்தருக்கு என்று மேல்விலாச மெழுதுக.

3. "உப்பு ஏற்றக் கேட்கும் கேள்விப்பத்திரமென்று" உறையில் இடதுபக்க மேல்மூலையில் எழுதவேண்டும். 1910 ம் ஆண்டு வைகாசி (மே) மாதம் 16 ந் திகதி மத்தியானத்துக்குமுன் கவர்ண்மேந்து ஏசெண்டர் கந்தோரிலும், அரசிறைவருமான காரியஸ்தர் கந்தோரிலும் சேரவேண்டியது.

4. கேள்விப்பத்திரம் அதற்கென்று அச்சடிக்கப்பட்ட கடதாசியில் எழுதவேணும். அக்கடதாசிகள் யாழ்ப்பாணம் கச்சேரியில் கேட்டுப் பெற்றுக்கொள்ளலாம். அப்படியான கடதாசியில் எழுதாத கேள்விப்பத்திரங்கள் ஏற்கப்படமாட்டா.

5. கேள்விப்பத்திரக் கடதாசிகள் பெறவிரும்புவோர் கச்சேரியில் ரூபாய் 50 கட்டிப் பற்றிச்சீட்டைக் கொடுத்துப் பெற்றுக்கொள்ளலாம். கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளப்பட்டது என்று கவர்ண்மேந்து ஏசெண்டினால் அல்லது அவரால் நியமிக்கப்பட்ட ஒருவரால் அறிவிக்கப்பட்டுப் பத்து நாளைக்குள்ளாகப் போதிய பிணை கொடுக்கத்தவறினால், அல்லது ஒப்பந்தத்தை நிறைவேற்ற மறுத்தால் கட்டப்பட்ட காசு பறிமுதலாக்கப்படும்.

6. ஒவ்வொரு கேள்விப்பத்திரத்தோடு இரண்டு தகுதியான மனுஷர் பிணை நிற்போமென்று சம்மதங்காட்டும் பத்திரம் இணைத்திருக்கவேண்டும். அவர்களுடைய விலாசமும் காட்டியிருக்கவேணும்.

7. கேள்விப்பத்திரம் (1) ஒரு அந்தருக்கு ஏற்றுமதி கூலி, (2) தழிவு எவ்வளவென்றும், (3) உப்பு ஏற்ற எவ்வளவு காலம் தேவையென்றும்.

8. ஒவ்வொரு ஒப்பந்தக்காரனும் ஒப்பந்தத்தை நிறைவேற்றுவதற்காக போதிய பிணைகாரர் பிணையுறுதிக்குச் சேரவேணும். மற்றுங் காரியங்கள் யாழ்ப்பாணக் கச்சேரியில் அறிந்துகொள்ளலாம்.

9. மேற்சொல்லியவைகளுக்கேற்க எழுதப்படாத கேள்விப்பத்திரங்கள் கவனிக்கப்படமாட்டா.

10. எந்தக் கேள்விப்பத்திரத்தையும் அல்லது எல்லாவற்றையும் ஏற்க அல்லது நியாயம்சொல்லாது மறுக்க முழு உரித்தும கவர்ண்மேந்துக்குண்டு.

யாழ்ப்பாணக் கச்சேரி, 1910 ம ௵ சித்திரை மீ 26 ந உ. — இ. நீ. ஹியுக்ஸ், கவர்ண்மேந்து ஏஜென்றக்கார.

## UNOFFICIAL ANNOUNCEMENTS.

தொழிலுக்குட்படாதவர்களின் அறிவித்தல்.

[D. F. Suraweera.]

கொழும்பு டிஸ்திரிக்கில் தென்பாக அனுத்கூறுகோறளையில் அம்பத்தளென்பதுல வெள்ளவத்தையில் வசிக்கும் சுரவீர முதலித்திறம்கே தொன் பெத்ரிக் சுரவீர ஆகிய நான் 1907 ம் ஆண்டு முதலாம் இலக்கச் சட்டவசச் சட்டத்தின் 15 வது பிரிவு 8 ம் செக்சன்படி தற்காலம் டிஸ்திரிக்கில் சிங்களப் பாஷையில் பிரசித்தநொத்தாரிஸ் ஆக வேலைபார்ப்பதற்கு இற்றைக்கு மூன்று மாசத்தின்பின் நெருக்குறு ஜெனரல் அவர்களிடம் உத்தரவு கேட்பேன் என்று இத்தால் அறிவித்தல் கொடுக்கின்றேன்.

வெள்ளவத்த, 1909 ம் ௵ அப்பிரல் மீ 26 ந உ. — டி. எ. சுரவீர.

H. C. COTTLE, GOVERNMENT PRINTER, COLOMBO, CEYLON.